DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No. 94/2024**

Deposition of Witness : PW-2 (3rd party)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரமேஷ் விஜி | Father's Name | : | சுரேஷ்குமார் |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 01-04-2025

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திருமதி.பாண்டியம்மாள், மொழிபெயர்ப்பாளர் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை– தொடங்கப்பட்ட நேரம் : 2.55 பி.ப.

மதுரை மாவட்டம் வாடிபட்டி தாலுகா சோழவந்தான் அருகில் உள்ள குருவித்துறையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 09.03.2024 காலை 9.30 மணியளவில் தேனி உழவர் சந்தையில் இருந்து காய்கறிகளை வாங்கிக்கொண்டு குமுளி – திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது எனக்கு முன்னால் சென்ற KA 03 NS 0642 கியா வாகனம் ஆனது அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் சென்று இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த நபர்கள் மீது அதிவேகமாக மோதியதில் மேற்படி நபர்கள் அனைவரும் தூக்கி வீசப்பட்டு ரோட்டின் மேற்கு பக்கம் கீழே விழுந்து விட்டார்கள் . மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்தேன் . கியா வாகனத்தின் ஓட்டுனரின் அதிவேக அதிவேகத்தினாலும் அஜாக்கத்தினாலும் ஏற்பட்டதாகும் கீழே இருந்தவர்களை அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் க.விலக்கு அரசு மருத்துவமனையில்

சேர்த்தார்கள் . சம்பவத்தை பற்றி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**3 –ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

மனுதாரர் அழைத்ததின் பெயரில் தான் நான் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். விபத்து சம்பந்தமாக யார் புகார் கொடுத்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த இருசக்கர வாகனத்தில் விபத்தின் போது மூன்று நபர்கள் பயணம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் பயணம் செய்து வந்தார்கள் அதில் இறந்த நபர் நரேன் வாகனம் ஓட்டவில்லை என்பது மட்டும் எனக்கு தெரியும் அவர் இடையில் உட்கார்ந்திருந்தாரா, மூன்றாவதாக உட்கார்ந்திருந்தாரா என்பது பற்றி எனக்கு தெரியாது . விபத்து நடந்த பகுதியில் தேசிய நெடுஞ்சாலையின் தடுப்புச் சுவர் (டிவைடர்) இருக்கிறது என்று சொன்னால் சரிதான்.
விபத்தானது எந்த திசையில் நடந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தானது ரோட்டின் மையப்பகுதியில் நடந்தது என்றால் சரிதான் . இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் சாலை விதிகளை மதிக்காமல் எந்தவித முன்னெச்சரிக்கை நடவடிக்கையிலும் ஈடுபடாமல் சைகையும் செய்யாமல் மேற்கு பக்கமாக திடீரென்று திரும்பிய போது தான் பின்னால் வரும் வாகனத்தின் மீது இடித்து இந்த விபத்து நடந்ததாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் இருசக்கர வாகனத்தை திருப்புவதற்காக ரோட்டில் ஓரமாக நின்று கொண்டு இருந்தார்கள் . அப்பொழுது கார் வேகமாக வந்து இடித்துவிட்டது. இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த மூன்று நபர்களில் ஒரு நபர் தலைக்கவசம் அணிந்திருந்தார். விபத்தின் போது மேற்படி தலைக்கவசம் அருகில் கீழே விழுந்து கிடந்தது. நான் மேற்படி விபத்தை நேரில் பார்க்கவில்லை. சாலை விதிகளை மதிக்காமல் இரு சக்கர வாகனத்தை ஒட்டி வந்து மேற்படி விபத்தினை ஏற்படுத்தியது அவருடைய கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணம் அவர்களுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>1,2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

மேற்படி 3 ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 3.20 பி.ப.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR GN

Digitally signed by SARAVANAKUMAR GN
DN: email=gnsaravanakumar@aij.gov.in, cn=SARAVANAKUMAR GN, c=IN
Date: 2025.04.01 17:02:52 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 01-04-2025